இணைப்பு 1.

[282-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக் குறியிட்ட 195-க்கான விடை]

(*a*) The Repatriates Co-operative Finance and Development Bank Limited, Madras, is advancing loans to the repatriates from Burma and Ceylon for conducting small business, running transport services like lorry, taxi, etc., conducting small-scale industries such as aerated waters, foundries, printing press, etc., purchase of fishing boats, etc., by Co-operative Societies of repatriates and cultivation purposes.

(*b*) Item-wise total amount sanctioned by the Bank and month-wise total amount disbursed by the Bank during the year 1971 are as follows :—

Item-wise amount of loan sanctioned by the Bank during 1971.

	Purpose for which sanctioned.	Amount sanctioned direct by the Repatriates Bank.	Amount sanctioned through Commercial Banks.
	(1)	(2)	(3)
		RS.	RS.
1	For conducting small business.	49,98,500	Nil.
2	For running transport service like lorry, taxi, etc.	5,73,900	1,36,500
3	For conducting small-scale industries such as aerated waters, foundries, printing press, etc.	1,83,000	Nil.
4	For purchase of fishing boats, etc.	71,500	Nil.
	For agriculture	Nil.	1,26,000
	Total .	58,26,900	2,62,500

1973 மார்ச் 1]

Month-wise loans disbursed by the bank in 1971—

	Month. (1)	Amount disbursed. (2)
		RS.
1971	January	1,44,000
	February	1,04,000
	March	3,000
	April	29,000
	May	25,000
	June	4,73,000
	July	10,69,000
	August	2,36,000
	September	12,14,000
	October	1,54,000
	November	10,35,000
	December	5,92,000
	Total ..	50,78,000

Note.—The difference between the amounts sanctioned and the amounts disbursed represents the amount to be disbursed as second instalments after verifying the proper utilisation of first instalments.

Item-wise amount disbursed—By the Bank everymonth during 1971 is not available with the Bank.

விடை

(அ) சென்னை அகதிகள் கூட்டுறவு நிதியுதவி-மேம்பாட்டு வங்கி, பர்மா, இலங்கை அகதிகளுக்குக் கடன் வழங்குகிறது. அகதிகள் சிறு வியாபாரங்கள் செய்யவும், லாரி, வாடகை மோட்டார் வண்டி போன்ற போக்குவரத்து வண்டிகளை வைத்து நடத்தி வரவும், சோடா, கலர் பானங்கள் தயாரித்தல், வார்ப்படச் சாலைகள், அச்சகம் போன்ற சிறு தொழில்களை நடத்தி வரவும், அகதிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மீன்பிடி படகுகள் வாங்குவதற்கும் விவசாயக் காரியங்களுக்கும் மேற்படி வங்கிக் கடன் வழங்குகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

[1973 மார்ச் 1

(இ) 1971-ஆம் ஆண்டில் ஒவ்வொரு இனத்திற்கும் வங்கி ஒப்பளிப்பு வழங்கியுள்ள மொத்தத் தொகையும், திங்கள் வாரியாக வங்கிக் கொடுத்துள்ள மொத்தத் தொகையும் பின் வருமாறு :—

1971-ல் ஒவ்வொரு இனத்திற்கும் வங்கி ஒப்பளிப்பு வழங்கியுள்ள கடன் தொகை.—

கடன்கள் வழங்கப்பட்டதற்கான நோக்கம்.	அகதிகள் வங்கி நேரடியாக ஒப்பளிப்பு வழங்கியுள்ள தொகை.	வணிக வங்கிகள் மூலமாக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை.
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
1 சிறு வியாபாரம் செய்தல் ..	49,98,500	இல்லை.
2 லாரி வாடகை மோட்டார் வண்டி போன்ற போக்குவரத்து வண்டிகளை வைத்து நடத்தி வருதல்.	5,73,900	1,36,500
3 சோடா, கலர் பானங்கள் தயாரித்தல், வார்ப்படச் சாலைகள், அச்சகம் போன்ற சிறு தொழில்களை நடத்தி வருதல்.	1,83,000	இல்லை.
4 மீன்பிடி படகுகள் வாங்குதல் ..	71,500	இல்லை.
5 வேளாண்மை	இல்லை.	1,26,000
மொத்தம் ..	58,26,900	2,62,500

1971-ல் வங்கி திங்கள் வாரியாக வழங்கிய கடன்கள் :—

திங்கள்.	வழங்கப்பட்டத் தொகை.
(1)	(2)
	ரூ.
1971 ஜனவரி	1,44,000
பிப்ரவரி	1,04,000
மார்ச்	3,000
ஏப்ரல்	29,000
மே	25,000
ஜூன்	4,73,000
ஜூலை	10,69,000

1973 மார்ச் 1]

திங்கள்	வழங்கப்பட்டத் தொகை
(1)	(2)
	ரூ
ஆகஸ்ட்	2,36,000
செப்டம்பர்	12,14,000
அக்டோபர்	1,54,000
நவம்பர்	10,35,000
டிசம்பர்	5,92,000
மொத்தம் ..	50,78,000

குறிப்பு :—ஒப்பளிப்பு வழங்கப்பட்டத் தொகைக்கும் கொடுக்கப்பட்டத் தொகைக்கும் உள்ள வேறுபாடானது, முதல் தவணையில் கொடுத்தத் தொகை சரியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்த பின்னர் இரண்டாம் தவணையாகக் கொடுக்கப்படவிருக்கும் தொகையைக் குறிப்பிடுவதாகும்.

1971-ல் வங்கி திங்கள்தோறும் ஒவ்வொரு இனத்திற்கும் வழங்கிய தொகை பற்றிய விவரங்கள் வங்கியிடம் இல்லை.

இணைப்பு

[287-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா 198-க்கான விடையைக் காண்க.]

விடை—

(அ) ஆம் ; அறிவிக்கப்பட்டது.

(இ) வேலையின்மை குறித்து நியமிக்கப்பட்ட குழு இன்னும் அதன் இறுதி அறிக்கையை அனுப்பவில்லை. வேலை வாய்ப்பிற்கான சில குறுகிய ஏற்பாடுகள் குறித்து தனது இடைக்கால அறிக்கையை மட்டும் அது அனுப்பியுள்ளது. அதன் நகல் ஒன்று தமிழ்நாடு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பரிவுரைகள், தலைமைச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்து கொண்டு அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

பரிவுரைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. பால், முட்டை, மாமிசம் போன்ற பெரும்பாலான பொருள்கள் விரைவில் கெட்டுப்போகும் தன்மையுள்ளவையாதலால் துணைத் தொழில்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்வதன் அவசியம் குறித்து குழு மீண்டும் தனது கருத்தை வலியுறுத்திக்

கூற விரும்புகிறது. சிறு உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோர் உற்பத்தி செய்த பாற்பண்ணைப் பொருள்கள், கோழிப் பண்ணைப் பொருள்கள், பன்றி வளர்ப்புப் பண்ணைப் பொருள்கள் ஆகியவற்றை செய்முறைப்படுத்தவும், விற்பனை செய்வதற்கும் அவசியமான பொருத்தமுள்ள அமைப்புகளை ஏற்படுத்துவது குறித்துப் பரிசீலிக்க மாநில அரசுகள் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

2. பயிரிடுவதற்கும், துணைத் தொழில்களான பாற்பண்ணை, கோழிப் பண்ணை, பன்றி வளர்த்தல் ஆகியவற்றை நடத்தவும், குறுகிய கால, நடுத்தர காலக் கடன்களைப் பெற இயலும் வகையில், சிறு உழவர்கள் மேம்பாட்டுச் சங்கம், குறைந்த நிலமுடையோர்-வேளாண்மைத் தொழிலாளர் மேம்பாட்டுச் சங்கம் போன்ற முகவரமைப்புகள், நிலத்தில் பதிவு பெற்ற உரிமை இராத குத்தகைதாரர்களுக்கும் பயிர் பங்குதாரர்களுக்கும் உதவி செய்வதற்கான ஏற்பாடுகளை அவசியமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

3. விரைவுத் திட்டத்தின் கீழ் கிராமப்புற வேலைவாய்ப்பிற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படும் நிதி, அம்மாவட்டத்தின் மக்கள் தொகை, அதன் வேளாண்மை வளர்ச்சி, ஏனைய பொருத்தமான கூறுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்ட பின்னர் தக்கவாறு மீண்டும் முடிவு செய்யப்படவேண்டும். இப்பிரச்சினையின் கடும் தன்மையைப் பொறுத்து மாவட்டத்தின் தெரிந்தெடுத்த சில பகுதிகளில் நியாயமான அளவுக்கு வேலை வாய்ப்புப் பணிகளை மேற்கொள்வது விரும்பத்தக்கதாகும்.

4. வளர்ச்சியின் எல்லா கூறுகளையும் கவனிக்கும் வகையில் தெரிந்தெடுத்த மாவட்டங்களில் அடைவான சிறு பகுதிகளில் முன்னோடித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அப்பகுதியில் பணியாற்ற தானே முன்வரும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பொருளாதார வழிகளில் வேலைவாய்ப்பளிக்க அத்திட்டங்கள் வகை செய்வதாய் இருக்கவேண்டும். பல்வேறு மாறுபட்ட நிலைமைகளில் அத்திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளை விளக்கமாகத் தெரியும்படிச் செய்ய அத்தகைய திட்டங்கள் நடவடிக்கை-ஆய்வுத் திட்டங்களோடு மேற்கொள்ளப்படவேண்டும். மேலும், எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு குறித்து விரிவான திட்டம் ஒன்றை வரைவதற்கான படிப்பினைகளையும் புள்ளிவிவரங்களையும் அது நல்க வேண்டும்.

5. வேளாண்-பணி நிலையங்கள், கிராமப்புறங்களில் உள்ள பொறியியல் பட்டதாரிகளுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வேலைவாய்ப்பினையும்/தானே தொழில் நடத்தவும் வகை செய்யக்கூடியதாகையால் அத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

1973 மார்ச் 1]

6. சிறுபாசனத் திட்டத்தில் வேலைவாய்ப்பு வளம் பெருவாரியாக இருப்பதால் அடுத்த இரு ஆண்டுகளில் மொத்தம் ரூ. 100 கோடி செலவில் மேலும் கூடுதலாக சுமார் 5 லட்சம் ஹெக்டேர் நிலம் இத்திட்டத்தின் கீழ் பாசன வசதி பெறும். இது முன்னரே செயல்படுத்தப்பட்டு வரும் நான்காவது திட்டப் பணிகளுக்குக் கூடுதலாக இந்த வேலைவாய்ப்புப் பணி அமைந்திருக்கும்.

7. கிராமப்புற மின்வசதித் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு வளத்தையும், செல்வ வளத்தையும் பெருக்கும் நோக்குடன், இத்திட்டம் 37,000 கிராமங்களுக்கு நீட்டிக்கப்படவேண்டும். மேலும் தற்போதுள்ள திட்டக் குறிக்கோள் அளவிற்கும் மேலாக ரூ. 235 கோடி முதலீட்டில் 3 லட்சம் விசையேற்றங்களுக்கு மின்வசதி வழங்கவேண்டும்.

8. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பின்தங்கிய நிலையில் உள்ள மாநிலங்கள் மின்வசதித் திட்டங்களை மேற்கொள்ள உதவி செய்யும் வகையில் இந்த வேலைத் திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படவேண்டும். அவைகளை தேசிய அளவுக்கு உயர்த்துவதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

9. சாலைத் திட்டங்களுக்கென ஒதுக்கப்படும் நிதிகளிலிருந்து தொகை எதையும் வேறு திட்டத்திற்குப் பயன்படுத்துவதை முழுவதும் நீக்கிவிட்டு சாலை நிதிக்கென ஒதுக்கப்பட்ட நிதியை அதற்காகவே செலவிடப்படுகிற பொருத்தமான ஏற்பாடுகளை மாநில அரசுகளுடன் கலந்துகொண்டு மத்திய அரசு தயாரிக்க வேண்டும்.

10. சாலைப்பணி குறித்த திட்ட நிதி ஒதுக்கம் முழுவதையும் ஒரு மாநிலம் பயன்படுத்த முடிந்து சாலைப்பணிகள் குறித்து மேற்கொண்டும் திட்டங்களை நிறைவேற்றுகின்ற நிலைமையில் அம்மாநிலம் இருக்குமானால், நான்காவது திட்டத்தின் எஞ்சிய பகுதியில் இத்திட்டங்களை நிறைவேற்ற மேற்கொண்டும் கூடுதலாக ரூ. 110 கோடி அளவிற்குக் கிடைக்கச் செய்யவேண்டும்.

11. உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து ஏற்பாடு ஒன்றின் கீழ் வேலை வாய்ப்பு வளமிருப்பதைக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து குறித்து திரு. பி. பகவதி தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிவுரைகளில் எஞ்சியவற்றைக் குறித்து முடிவு ஒன்றை அரசு விரைந்து எடுக்கவேண்டும்.

12. கிராமப்புறங்களில் வீட்டு வசதி நிலை மிக மோசமாக இருப்பதாலும் அண்மைக் காலங்களில் இப்பகுதி வேளாண்மை நிலங்களில் உற்பத்திப் பெருக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள வாய்ப்பு வளங்களைக் கருத்தில் கொண்டும் 1972-73-ல் ஆயிரம் பேருக்கு 0.8 வீடுகள் என்ற விதத்தில் அல்லது 3.6 இலட்சம் புதிய வீடுகள் கட்டுவதற்கும் 1973-74-ல் ஆயிரம் பேருக்கு 0.9 வீடுகள் என்ற விதத்தில் அல்லது 4.1 லட்சம் புதிய வீடுகள் ஆக மொத்தம் 7.7

இலட்சம் வீடுகளை ரூ. 230 கோடி மதிப்பீட்டு முதலீட்டில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

13. கிராமப்புற வீடுகளைக் கட்டுவது குறித்து பெரிய அளவிலான திட்டம் ஒன்றை அரசு வகுத்து, தொடங்கி நிறைவேற்றவேண்டும். இத்திட்டத்திற்குத் தேவையான நிறுவன அமைப்புக்கு அரசு வகை செய்து, கிராம விளம்பரச் சாதனம் மூலமாகவும், கிராமப்புறங்களில் பணியாற்றும் வளர்ச்சி வட்டார அதிகாரிகள், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் போன்ற அரசு முகவர்கள் மூலமாகவும் இத்திட்டத்தை முனைப்பாக வளர்க்கவேண்டும்.

14. வீட்டு வசதி வாரியங்களை நகர்ப்புற பகுதிகளில் தற்போது மேற்கொண்டு வரும் அலுவல்களான நிலம் கையகப்படுத்தல், நில மேம்பாடு, வீட்டு வசதித் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுதல் ஆகியவற்றை கிராமப் பகுதிகளில் மேற்கொள்ள தகுந்த முகவரமைப்பு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் தற்போதுள்ளவர் நிலைமையில் தேவைப்படுகிறது.

15. வீட்டு வசதித் திட்டங்கள், தனியார் வீடுகள் முதலியவற்றிற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் ஆகியோருக்கு நிதி உதவி அளிக்கும் காரியத்திற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற வீட்டு வசதி நிதிக் கழகம் ஒன்றை அமைக்கவேண்டும். மையத்தில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (அல்லது அவசியமானால் தனி ஒரு கழகம்) கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கிற தலைமை நிறுவனமாகச் செயல்படலாம்.

16. கிராமப்பகுதிகளில் வீட்டு வசதித் திட்டத்தை வளர்க்கவும், ஊக்குவிக்கவும் ஆயுள் காப்புறுதிக் கழகம் அதன் பங்கை ஆற்றவேண்டும்.

17. தற்போதுள்ள கிராமப்புறக் குடிநீர் வழங்கல் திட்டங்களை நிறைவேற்றும் பணி விரைவுபடுத்தப்படவேண்டும்; அத்திட்டங்களை மேலும் பல கிராமங்களுக்கு நீட்டிக்கவேண்டும். இரண்டாண்டுக் கால அளவில் ரூ. 61.65 கோடி மொத்த நிதிச் செலவில் மேலும் 21,000 கிராமங்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்படவேண்டும்.

18. நிலையாகப் பிரதிகூலமாய் அமைந்துள்ள எஞ்சிய 41,000 கிராமங்களுக்கு தகுந்த திட்டங்களைத் தீட்டி வரைபடங்களையும் மதிப்பீடுகளையும் தயாரிப்பதற்கான பணியும் விரைவில் மேற்கொள்ளப்படவேண்டும்.

19. தொடக்கக் கல்வியைப் பரப்புவதற்கு விரிவான திட்டம் ஒன்றை விரைந்து மேற்கொள்ளவேண்டும். 1975-76-ல் ஆண்டுக்குள் 6-11 வயதுத் தொகுதியில் உள்ள 95 சதவிதச் சிறுர்களுக்கும், 11-14 வயதுத் தொகுதியில் உள்ள 45 சதவிதச் சிறுவர்களுக்கும் கல்வி வசதி அளிக்க இயலும் வகையில் இத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படவேண்டும்.

1973 மார்ச் 1]

20. பெருவாரியான மக்களுக்குக் கல்வி புகட்டுவதற்கான திட்டம் ஒன்றை உடனடியாக நிறைவேற்றுவது அவசியம் என்றும் நாங்கள் கருதுகிறோம். படித்து வேலையற்றிருப்போரின் எண்ணிக்கை அதிகமாக உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 100 மாவட்டங்களில் இத்திட்டம் தொடங்கிச் செயல்படுத்தப்படலாம்.

21. தொழில் துறையில் வேலைவாய்ப்பைக் கூடுதலாக்கும் பொருட்டு பல்வேறு தொழில்களில் நிறுவன உற்பத்தித் திறனளவு சரிவர பயன்படுத்தப்படாமல் இருப்பதைக் கூடியமட்டில் குறைக்கவேண்டிய அவசியமாகிறது. அண்மையில் குறிப்பிட்ட 54 தொழில்களில், அவற்றுக்கு உரிமையளிக்கப்பட்ட உற்பத்தித் திறனளவுக்கு அதிகமாக 100 சதவீதம்வரை கூடுதலாக உற்பத்தி செய்ய சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏனைய தொழில்களின் தேர்வில் அவைகளின் தகுதிக்கேற்ப அவற்றை; ஆய்வு செய்யவேண்டும். வசதியாயிருப்பதால் அவை கணிசமான அளவிற்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தக்கூடுமென விளக்கமாகத் தெரியவரின், இத்தகைய வசதிகளை அவற்றுக்கு அனுமதிக்கவேண்டும்.

22. தனித்தியங்க முடியாது நோய்த்த தொழிற்சாலைகளை மூடுவது குறித்த பிரச்சினையை கவனிக்க அவ்வாறு மூடப்பட்ட ஆலைகளின் அல்லது மூடப்படுமோவென அச்சப்படும் நிலையிலுள்ள தொழிற்சாலைகளின் பொருளாதார நிலை அவற்றின் நிலைமை ஆகியவற்றை மேற்பார்வையிடும் கடமை ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு முகவாப்பை அரசு ஏற்படுத்த வேண்டும். இது காரியத்திற்காக அவ்வப்போது உரிய நேரத்தில் முறையான அறிக்கை கொடுக்கும் ஏற்பாட்டை இந்த முகவாமைப்பு உருவாக்கவேண்டும். மேலும் அவ்வப்போது உருவாகும் நிலையை அரசுக்கு இந்த அமைப்பு தெரிவிக்கவேண்டும். தொழில் வளர்ச்சி அமைச்சகம் ஆய்வுகளை மேற்கொண்டு இந்த அமைப்பின் குறிக்கோளின் கீழ் அவ்வப்போது கொண்டுவரவேண்டிய தொழில்களைக் கண்டறிய வேண்டும். போதிய நிதி வசதி இல்லையென்ற காரணத்தாலும் இதற்குப் போதிய நிதி வசதி நமது கருத்துப்படி இருக்கவேண்டும். இது சம்பந்தப்பட்ட அதிகாரி எடுக்க வேண்டிய தீர்வு நடவடிக்கையும் உரிய கால நடவடிக்கையும் தடைபடக் கூடாதென்பதும் முக்கியமானதாகும். இதற்காக, போதுமான அளவு சுழல் நிதியுடன் தனியாக கழகம் ஒன்றை அமைக்கவேண்டும்.

23. தாமே தொழில் நடத்தும் பல்வேறு வகையினருக்கு உதவியளிப்பதில், அதிக நிதி வசதியுடைய வங்கிகள், நல்ல பலனளிக்கக்கூடிய வகையிலும், நோக்கம் நிறைவேறும் வகையிலும் பெருமளவிற்கு உதவ இயலும். வேலைவாய்ப்பளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள திட்டங்களைத் தொடங்க வங்கி அதிகாரிகள் தாமே இலக்குகளை ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு வங்கியின் கிளை அலுவலகமும் இந்தத் திட்ட இலக்கை அடையவேண்டும். இத்தகைய

திட்டங்களுக்காக கிடைக்கக்கூடிய கூடுதல் நிதிவாயில்களில் தகுந்த அளவு ஒதுக்கவேண்டும். இத்திட்டங்களுக்காக ஓர் ஆண்டில் ஒதுக்கப்படவேண்டிய தொகை, கிடைக்கக்கூடிய கூடுதல் நிதிவாயில்களில் 25 முதல் 30 சதவீதம்வரை இருப்பது நியாயமாகும்.

24. சொந்தத் தொழில் நடத்தும் வகையினருக்கு நிதி உதவி அளிப்பதில் வங்கிகள் பரந்த தாராள நோக்கம் கொண்டதாயிருக்கவேண்டும். ஒரு தொழில் அல்லது வாணிபத் துறையில் சொந்தத் தொழில் நடத்த விழையும் வகையினருக்கு நிதி வசதிகளை மறுக்கப்படாத வகையில் வேலைவாய்ப்புத் துறை மூலவதற்கும் இந்த வங்கிகள் நிதி வசதி அளிக்கவேண்டும்.

25. சிறப்புக் கடனுதவி ஏற்பாடுகள் நல்ல பயனுறும் முறையில் அமையும் பொருட்டு, கடன்கள்பற்றிய நிபந்தனைகள், எடுத்துக்காட்டாக வட்டி விதம், திருப்பிச் செலுத்துவதற்கான கால அளவு, பிணைய அளவுகள் சற்று எளிதாக இருக்க வேண்டும் என்பதும், கடன் தேவைகளையும், கடன் வாங்குபவர்களின் சக்தியையும் கருத்தில் கொள்ளவேண்டுமென்பதும் அவசியமாகும். ஏற்றத் தாழ்வான வெவ்வேறு வட்டிவீதம்பற்றி குழுவின் பரிவுரைகள்மீது சம்பந்தப் பட்ட அதிகாரிகள் விரைவிலேயே ஒரு முடிவெடுக்க வேண்டும்.

26. குறிப்பிட்ட பகுதியில் அல்லது தொழில் ஈடுபட்டுள்ள தொழில் முனை வர்களுக்காக மூலப் பொருள்கள், நடைமுறை மூலதனம், விற்பனை வசதி முதலியவற்றில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கவனிப்பதற்காக நிறுவன ஏற்பாடு ஏதாவது இருக்கவேண்டும். இதற்காக, தொழில் முனைவர்கள் ஒன்று சேர்ந்து சங்கம் அல்லது குழு ஒன்றைத் தாங்களாகவே அமைத்துக்கொள்ள வேண்டும். இந்தச் சங்கம் அல்லது குழு, மூலப்பொருள்கள் நிதி, உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்தல் முதலியன போன்ற சிறு தொழில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் தேவையான தேர்வுகளில் இப்பிரச்சினைகளைத் தகுதியாக அதிகாரியிடம் எடுத்துச் செல்லும். இத்தகைய சுயேச்சை நிறுவனங்களுக்கு அரசு ஆதர வளிக்க வேண்டும்.

27. வேலையில்லாமலிருப்பவர்கள் விண்ணப்ப கட்டணம் செலுத்துவதி னின்றும் விலக்களிக்கப்படவேண்டும். எனினும், பயணச் செலவுகள் அளிப் பதில் தேர்வு முறையைப் பின்பற்ற வேண்டும். வேலைக்கு ஆட்களைத் தெரிந் தெடுப்பதில் நேர்முகத் தேர்வு அவசியமாகும் நேர்வுகளில் மட்டுமே, அவர்கள் அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளப் பயணச் செலவுத் தொகை அளிக்கப்படவேண்டும். ஆயினும் வேலைக்குத் தெரிந்தெடுப்பதில் விண்ணப் பதாரர்கள் அனைவருக்கும் போட்டித் தேர்வு அல்லது ஒன்று அவசியமாயுள்ள ஒரு எற்பாட்டின் விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் பயணச் செலவுத் தொகை கொடுக்கவேலுண்டியது அவசியமில்லை.